செ.வெ.எண்: 50 / ஜனவரி நாள்: 29.01.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் ரூ.6.49 இலட்சம் மதிப்பிலான வேளாண்மை கருவிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (29.01.2016) நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் தேசிய வேளாண் இயந்திரங்கள் துணை இயக்க திட்டத்தின் கீழ் போகலூர் ஒன்றியத்தில் வேளாண் இயந்திரங்கள் சேவை மையம் அமைப்பதற்காக ரூ.6.49 இலட்சம் மதிப்பிலான வேளாண்மை இயந்திரங்களை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் இன்று (29.01.2016) விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஏற்கனவே விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் வேளாண்மை இயந்திரமயமாக்கல் துணை இயக்கத்தின் கீழ், போகலூர் ஒன்றியத்தில் வேளாண் இயந்திரங்கள் சேவை மையம் அமைப்பதற்காக ரூ.1,97,500/- மதிப்பிலான 2 சுழற்கலப்பைகள், ரூ.56,500/- மதிப்பிலான 2 கொழு கலப்பைகள், ரூ.80,000/- மதிப்பிலான 2 விதை விதைக்கும் கருவிகள் மற்றும் ரூ.3,15,000/- மதிப்பிலான 2 மட்டை தூளாக்கும் கருவிகள் என மொத்தம் ரூ.6,49,000/- மதிப்பிலான வேளாண் கருவிகளை ரூ.2,52,000/- மானியத்தில் செவ்வூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.க.காளிமுத்தன் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இதனைத்தொடர்ந்து விவசாயிகள் தெரிவித்த கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்பொறியியல் துறை செயற்பொறியாளர் திரு.எஸ்.முகம்மது அலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) திரு.ஆர்.அரிவாசன் , வேளாண்மைப் பொறியியல் துறை உதவிப் பொறியாளர் திரு.சிவக்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், விவசாயிகள் சங்கப்பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம்: மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**